

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | டிசம்பர் 10, 2020 | புரட்சி 19 | முழக்கம் 20 | விலை: ரூ.3.00

## ‘ஆன்மிகக் கட்சி’யும் இளிச்சவாய் தமிழனும்

‘ஆன்மிக அரசியல் வேறு; மதவாத அரசியல் வேறு’ என்று விளக்க உரை தந்திருக்கிறார், ‘ரஜினி’. கட்சியின் ‘சூப்பர்வைசர்’ தமிழருவி மணியன்! அத்துடன் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் அர்ஜுனமூர்த்தியின் டுவிட்டர் பதிவு ஒன்று முகநூலில் வலம் வருகிறது.

“அரிய வகைகளையெல்லாம் அதன் தன்மை மாறாமல் பாதுகாக்கும் காலமாக தற்காலம் உள்ளது. அந்த வகையில் வேதப் பண்டிதர்களாகவும், அறிவு சார்ந்த நல்லொழுக்க சீலர்களாகவும் உள்ள ‘பிராமணர்’களையும் அவர்களுக்கே உரித்தான அடையாளங்களையும் நாம் பாதுகாக்க வேண்டும்”

பிராமணர் அனைவருமே அறிவு சார்ந்த நல்லொழுக்க சீலர்கள் என்று நன்னடத்தைச் சான்றிதழ்களை தயாராகவே வைத்திருக்கிறார், ரஜினி கட்சியின் மற்றொரு நிர்வாகி அர்ஜுனமூர்த்தி.

எதையாவது இப்படிப் பேசிக்கொண்டே இருங்கள், நான் பெங்களூருக்கு ‘அண்ணாத்தே ஷூட்டிங்கு’ப் புறப்படுகிறேன் என்று கிளம்பி விட்டார் – கதாநாயகன்.

இப்போது குருமூர்த்தி என்ற ஆடிட்டரும் அவருக்காகப் பேச வந்திருக்கிறார். எம்.ஜி.ஆர். ஆட்சியைப் பிடித்ததுபோல் ரஜினியும் ஆட்சியைப் பிடிப்பார் என்று கூட்டல் கழித்தல் கணக்குகளைப் போட்டுக் காட்டுகிறார், ஆடிட்டர்.

அர்ஜுன மூர்த்தி, குருமூர்த்தி பேச்சுகள் ஆன்மிகமா, மதவாதமா? எந்தப் பிரிவின் கீழ் வருகிறது என்பதை உரை எழுதும் தமிழருவி தான் விளக்க வேண்டும்.

தமிழருவியின் மற்றொரு பேச்சும் முகநூலில் வலம் வந்து கொண்டிருக்கிறது.

‘சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தை கருநாடகம் வெறும் ‘கண்டக்டராக’ (நடத்துனர்) மட்டும் வைத்திருந்தது. அந்த கண்டக்டரை உச்சம் பெற்ற நடிகனாக மாற்றியவன் தமிழன்; கோடீசுவரனாக மாற்றியவன் தமிழன்; இங்கே இருக்கிற சில **இளிச்சவாய் தமிழர்கள் முதலமைச்சராக மாற்ற வேண்டும்** என்றுகூட நினைத்திருக்கிறான்; இந்த ரஜினிகாந்த் தனது முதலீடு முழுவதையும் கருநாடகத்தில் போட்டிருக்கிறான்...”

தமிழருவி மணியன், முதலமைச்சர் பதவிக்கு கடந்த பல ஆண்டுகளாகவே ஆள் பிடித்துக் கொண்டிருந்தார். ரஜினியின் வீட்டுக் கதவைத் தட்டுவதற்கு முன்பு அவர் பேசிய பேச்சு இது. இதுவும் ஆன்மிகத்தில் வருமா, மதவாதத்தில் வருமா என்பதையும் அவர்தான் விளக்க வேண்டும்.

மற்றபடி தமிழருவி, ‘மதவாதம்–ஆன்மிக’த்துக்கு பதிவுரை பொழிப்புரை வழங்குவதற்கு ரஜினி பேசிய பேச்சுகளின் நீண்ட பட்டியலே இருக்கிறது.

“அரசியலுக்கு நான் வரப்போவது உறுதி; ஆனால் முதலமைச்சர் பதவிக்கு வரமாட்டேன்.”

“என்னுடைய உடல்நலன் கருதி மருத்துவர்கள் என்னை அரசியலுக்குப் போக வேண்டாம் என்று ஆலோசனை கூறுகிறார்கள்.”

“நான் ஓட்டுகளைப் பிரிப்பவனாக இருக்க விரும்பவில்லை; அதிகாரத்தைப் பிடிப்பவனாக அரசியலுக்கு வரவேண்டும்.”

“மக்கள் புரட்சி வந்த பிறகு அரசியலுக்கு வருவேன்”.

“நான் வெற்றி பெற்றால் அது மக்களின் வெற்றி; தோற்றால் அது மக்களின் தோல்வி; (அதாவது அது எனது தோல்வி அல்ல; எனக்கு அதிகாரம் வழங்காமல் மக்கள் தோல்வி அடைந்து விட்டார்கள்)”.

“மோடியும் அமித்ஷாவும் – கிருஷ்ணனும் அர்ஜுனனும் போன்றவர்கள்.”

“500, 1000 ரூபாய் நோட்டுகளை செல்லாததாக்கியது துணிவான நடவடிக்கை; கருப்புப் பணம் ஒழியும்; குடியுரிமை திருத்தச் சட்டத்தை வரவேற்கிறேன்.”

– இப்படி ரஜினி உதிர்த்த பல்வேறு பொன்மொழிகள் ஆன்மிகமா? மதமா? என்பதை எல்லாம் தமிழருவி விளக்கி, ரஜினிகாந்த் தொடங்கப் போகும் கட்சியை ‘இளிச்சவாய் தமிழனிடம்’ கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

அர்ஜுன மூர்த்தி, ‘பிராமணர்களைப்’ பாதுகாக்கும் வேலையை பார்த்துக் கொள்ளட்டும்; தமிழருவி இளிச்சவாய் தமிழர்களைப் பார்த்துக் கொள்ளட்டும்.

‘ரஜினி கட்சி’ ஆன்மிகக் கொடி ஏற்றி வளரட்டும்; அதை விட முக்கியம் ‘அண்ணாத்தே’ படத்தின் வெற்றி!

**– கோடங்குடி மாரிமுத்து**

## அம்பேத்கர் நினைவு நாளில் கழகத்தினர் ஜாதி எதிர்ப்பு சூளுரை

***புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளான டிசம்பர் 6இல் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சிலைகளுக்கு மாலை அணிவித்து ஜாதி எதிர்ப்பு சூளுரையை கழகத்தினர் எடுத்தனர்.***

**சென்னை:** திராவிடர் விடுதலைக் கழகம் சென்னை மாவட்டம் சார்பில் அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு, காலை 9 மணி யளவில், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் அம்பேத்கர் மணிமண்டபத்தில் மாலை அணி விக்கப்பட்டது. தொடர்ந்து, விசாலாட்சித் தோட்டத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு வட சென்னை மாவட்ட செயலாளர் இராஜி மாலை அணிவித்தார்.



அதைத் தொடர்ந்து, இராயப்பேட்டை வி.எம். தெருவில், அம்பேத்கர் உருவப் படத்திற்கு தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் மாலை அணிவித்தார். அம்பேத்கர் மணிமண்டபம், மந்தைவெளி, இராயப் பேட்டை ஆகிய பகுதிகளுக்கு தோழர்கள் கொள்கை முழக்கங்களை எழுப்பி ஊர்வலமாக வந்தனர். ஊர்வலத்தைத் தொடர்ந்து, அம்பேத்கர் நினைவு நாள் கருத்தரங்கம், சென்னை, தலைமை அலுவலகத்தில் காலை 11:30 மணியளவில் நடைபெற்றது. நிகழ்விற்கு தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் தலைமை வகித்தார். “அம்பேத்கர் பார்வையில் இன்றைய அரசியல்” என்ற தலைப்பில் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் , பாசிச பாஜக, இந்துராஷ்டிரத்தை நோக்கி இந்தியாவை நகர்த்தும் முயற்சிகளை விளக்கி உரையாற்றினார்.



**திருப்பூர்:** திராவிடர் விடுதலைக் கழகம் திருப்பூர் மாவட்டம் சார்பாக நினைவேந்தல் நிகழ்வு, ஜாதி ஒழிப்பு உறுதியேற்பு நிகழ்வாக 06.12.2020 அன்று காலை 9.00 மணியளவில் மாநகராட்சி எதிரில் உள்ள அம்பேத்கர் சிலை அருகில் நடைபெற்றது. கழகப் பொருளாளர் துரைசாமி புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தார். புரட்சியாளரின் கருத்துக்கள் முழக்கங்களாக எழுப்பப்பட்டன. தேன்மொழி ஜாதி ஒழிப்பு உறுதி மொழி கூற தொடர்ந்து தோழர்கள் உறுதி மொழி ஏற்றனர்.




இந்நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, மாவட்டத் தலைவர் முகில் ராசு, மாவட்ட செயலாளர் நீதிராசன், இணையதள பொறுப்பாளர் விஜயகுமார் முகநூல் பொறுப்பாளர் பரிமளராஜன், இராமசாமி தெற்குப் பகுதி பொறுப்பாளர், சங்கீதா மாவட்ட அமைப்பாளர், மாதவன் மாநகர செயலாளர், முத்து மாநகர அமைப்பாளர், சண்முகம் ஒன்றிய செயலாளர், பல்லடம், சரசு, அய்யப்பன், விஜய் ,வீரலட்சுமி, மாரிமுத்து, ஸ்ரீஜா, கார்த்திகேயன், பெரியார் பிஞ்சு லவ்லி, பிரசாந்த், நயனா, நஜ்முன்னிசா, கதிர் முகிலன், பழனிச்சாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

**கோவை :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் கோவை மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி தலைமையில் வடகோவை உணவு கிடங்கில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு காலை 9 மணியளவில் மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் இராமச்சந்திரன் , தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் மற்றும் மாவட்ட மாநகர பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் என 25க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அதற்கு முன்பாக அம்பேத்கரின் கொள்கைகளை விளக்கும் வகையில் நினைவுநாள் சுவரொட்டிகள் மாவட்டம் முழுவதும் 300 சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.



**மதுரை :** மதுரை மாநகர் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாளவிகா தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலையணிவிக்கப்பட்டு கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. புறநகர் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மேலூர் பேருந்து நிலையத்தில் சத்தியமூர்த்தி தலைமையில் அம்பேத்கர் பதாகை அமைக்கப்பட்டு மாலையணிவிக்கப்பட்டது. மாநகர் தலைவர் காமாட்சி பாண்டி, சசிகலா, அழகர், மருது பாண்டி, குமார், மகேசுவரன், இளஞ்செழியன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.



**கள்ளக்குறிச்சி :** கள்ளக்குறிச்சி மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக சங்கராபுரத்தில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு காலை

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## விவசாயிகளின் வீரம் செறிந்த போராட்டம்

‘டெல்லியில் பல்லாயிரம் விவசாயிகள் திரண்டு நடத்தி வரும் போராட்டம் உலகின் கவனத்தையே ஈர்க்கத் தொடங்கியிருக்கிறது. கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் ஒன்றிய ஆட்சி கொண்டு வந்துள்ள மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்று நடக்கும் இந்தப் போராட்டம், இது வரை நாடு காணாத ஒன்று என்றே கூற வேண்டும். பா.ஜ.க.வின் மோடி ஆட்சிக் காலம் தொடங்கியதிலிருந்து பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்காமல், உரிமையைப் பறிக்கும் சட்டங்களைத் திணித்துக் கொண்டே இருக்கிறார்கள். அந்த சட்டங்களை எதிர்ப்பே இன்றி அனைவரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்று மிரட்டுகிறார்கள். எதிர்ப்புக் குரல் வந்தால் ‘தேச விரோதிகள்’, ‘அரசியல் சதி’ என்று குற்றம் சாட்டி ஒடுக்குமுறை சட்டங்களை ஏவி எதிர்ப்புக் குரலை நசுக்குகிறார்கள். இப்போது விவசாயிகளிடம் இதே அணுகுமுறையைப் பின்பற்றும்போது அது பலிக்காமல் போய்விட்டது.

முதலில் விவசாயம் மாநில அரசுகளின் உரிமைப் பட்டியலில் இருக்கும் போது ஒன்றிய அரசு தலையிட்டு மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து இந்தச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. இதைத் தட்டிக் கேட்கக் கூட துணிவில்லாத அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, சட்டத்தை வரவேற்கிறது. முதல்வர் பழனிச்சாமி, விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் சட்டம் என்கிறார். அக்கட்சியின் மாநிலங்களவை உறுப்பினரான எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், மாநிலங்களவையில் இந்த சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். அது கட்சியின் கருத்து இல்லை என்று கூறி விட்டார்கள்.

சந்தையில் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கான குறைந்தபட்ச விலையை இந்தச் சட்டத்தில் உறுதி செய்யப்படவில்லை என்பது விவசாயிகளின் நியாயமான அச்சம். விவசாயி தனது உற்பத்திப் பொருளை இந்தியாவில் எந்தப் பகுதிக்கும் சென்று விற்கலாம்; விலையை அவர்களே நிர்ணயிக்கலாம்; பெரும் தொழில் நிறுவனங்கள் விவசாயப் பொருள்களை வாங்கலாம்; அதற்கான ஒப்பந்தத்தை விவசாயிகளும் கார்ப்பரேட் நிறுவனங்களும் செய்து கொள்ளலாம்; ஒப்பந்தத்தை கார்ப்பரேட் நிறுவனங்கள் மீறினால் சட்டப்படி மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்ய உரிமை உண்டு என்றெல்லாம் இந்தச் சட்டம் கூறுகிறது.

இந்தச் சட்டப் பிரிவுகளுக்குள் நுழைந்து கொண்டு சட்டங்களுக்கு ஆதரவாக வாதாடுகிறார்கள். இதில் அடிப்படையான ஒரு கேள்வி இருக்கிறது. இந்த நாட்டில் கார்ப்பரேட் நிறுவனங்களும் விவசாயிகளும் சம வலிமையுள்ளவர்களாக இருக்கிறார்களா? சட்டம் வழங்கிய உரிமைகளை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புகள் இரு பிரிவினருக்கும் சம அளவில் இருக்கிறதா என்பதுதான் அடிப்படை கேள்வி. கார்ப்பரேட் நிறுவனங்கள் வங்கிகளில் வாங்கிய பல்லாயிரம் கோடி ரூபாய் கடனை அரசே முன் வந்து இரத்து செய்ய முடியும். மாணவர்கள் கல்விக்கு வாங்கிய கடன் தொகையை மத்திய தரப் பிரிவினர் வாங்கிய கடனை திருப்பி செலுத்தாவிட்டால், வங்கி ‘அடியாட்களை’ அனுப்பி மிரட்டும்; உடைமைகளை பறிமுதல் செய்யும்; கார்ப்பரேட் நிறுவனத்திடம் பேரம் பேசக் கூடிய வலிமையும் ஒப்பந்தத்தை மீறும்போது அவர்களை எதிர்த்து சட்டரீதியாகப் போராடும் வலிமையும் விவசாயத்தை வேறு வழியின்றி ‘கட்டி அழுது’ கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு உண்டா என்ற அடிப்படையான கேள்விக்கு ஆட்சியாளர்களிடமிருந்து பதில் இல்லை.

விவசாய விற்பனை சந்தையில் கார்ப்பரேட் நுழைந்து விட்டால் பிறகு அரசு விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் பாதுகாப்புக்கான கட்டுப்பாடுகள் படிப்படியாக தளரும், விவசாய நிலங்களே ஒரு கட்டத்தில் கார்ப்பரேட்டுகளிடம் அடகுக்கோ விற்பனைக்கோ போய் விடும் என்ற விவசாயிகளின் நியாயமான அச்சத்தை மறுக்க முடியுமா என்று கேட்கிறோம்.

விவசாயமும் சரி; விவசாயப் பொருள் விற்பனை சந்தையும் சரி; இந்தியா முழுமைக்கும் ஒரே தன்மையானது அல்ல; மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது. ஆனால் ‘ஒரே நாடு; ஒரே சந்தை’ என்ற ஒற்றைத் தேச முழக்கத்தில் விவசாயத்தையும் கொண்டு வருகிறது ஒன்றிய ஆட்சி. அத்தியாவசியப் பொருள்கள் பட்டியலிலிருந்து வெங்காயம், உருளைக் கிழங்கு போன்றவற்றை நீக்கியதோடு, மின்சார திருத்தச் சட்டம் வழியாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் நீக்கம் செய்யப்படும் ஆபத்துகளையும் விவசாயிகள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

குறைந்த அளவு நிலம் வைத்துள்ள விவசாயிகள் எண்ணிக்கைதான் இங்கே அதிகம். வசதி படைத்த பெருமளவில் நிலம் வைத்துள்ள விவசாயிகள் இந்த சிறு விவசாயிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதையும் 1970ஆம் ஆண்டு பசுமைப் புரட்சித் திட்டம் வந்த பிறகு பெரும் நில விவசாயிகள், விவசாயம் தொடர்பான தொழில்களில் முதலீடு செய்து சிறு விவசாயிகளை, தங்கள் மூலப் பொருள்களுக்கும் வேலை வாய்ப்புக்கும் பெரும் விவசாயிகளை சார்ந்து நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளியிருப்பதையும் இதன் வழியாக ஜாதியப் பாகுபாடுகள் உள்ளீடாக செயலாற்றிக் கொண்டிருப்பதையும் புதிய வேளாண் சட்டங்களில் இந்த சிறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயக் கூலிகளின் பாதுகாப்புகளுக்கான பிரிவுகள் எதுவும் இடம் பெறாமல் இருப்பதையும் ஆங்கில ஏடுகளில் ஆய்வாளர்கள் எழுதும் பல கட்டுரைகள் சுட்டிக்காட்டி வருகின்றன.

ஒரே நாடு ஒரே கல்வி; ஒரே நாடு ஒரே மதம்; ஒரே நாடு ஒரே வரி; ஒரே நாடு ஒரே மொழி; ஒரே நாடு ஒரே ரேஷன் என்று பன்முகத் தன்மையை அழித்து ஒற்றை இந்தியாவை நோக்கி நாட்டை இழுத்துச் செல்லும் பார்ப்பனிய மதவாத அதிகார சக்திகள் இப்போது ‘ஒரே நாடு; ஒரே விவசாய சந்தை’ என்கிற திட்டத்துக்கு நகர்ந்துள்ளனர். நாட்டை அதிபர் ஆட்சி முறைக்குக் கொண்டு செல்வதற்காகச் சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் விவசாயிகளின் நேர்மையான இந்தப் போராட்டத்தை, விவசாயத்தையும் கடந்து பார்ப்பனிய மதவாதப் பிடிக்குள்ளிருந்து மக்களை விடுவிக்க விரும்பும் ஒவ்வொரு தேசிய இனமும் ஆதரிக்கக் கடமைப் பட்டுள்ளன.

## ‘மதப் பெரும்பான்மை’ பேசுவது சரியா?

People who rely upon majority rule forget the fact that majorities are of two sorts: (1) communal majority and (2) political majority. A political majority is changeable in it's class composition. A political majority grows. A communal majority is born. The admission to a political majority is open. The door to a communal majority is closed. The politics of a political majority are free to all to make and unmake. The politics of a communal majority are made by its own members born in it.

How can a communal majority run away with the title deeds given to a political majority to rule? To give such title deeds to a communal majority is to establish a hereditary government and make the way open to the tyranny of that majority.

“மெஜாரிட்டி அடிப்படையிலான வாதத்தை முன்வைப்பவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள். அதில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று அரசியல் பெரும்பான்மை (Political Majority), இரண்டு - (மத) வகுப்புவாத பெரும்பான்மை (Communal Majority), அரசியல் பெரும்பான்மை மாற்றத்துக்கு உட்பட்டது. அரசியல் பெரும்பான்மைக்குள் அடங்கியுள்ள பிரிவினர் மாறக் கூடியவர்கள் (Class Composition). ஆனால் (மத) வகுப்புவாத பெரும்பான்மை மாற்றத்துக்கு உள்ளாகவே முடியாது. அது பிறப்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப் படுகிறது. அரசியல் பெரும்பான்மை என்ற வட்டத்துக்குள் யார் வேண்டுமானாலும் வரலாம். அது திறந்தே இருக்கும். (மத) வகுப்புவாதப் பெரும்பான்மைக்கான கதவுகள் எப்போதுமே மூடப்பட்டிருக்கும். அரசியல் பெரும்பான்மை என்பது ஒரு ஆட்சியை உருவாக்குவதற்கும் அகற்றுவதற்கும் அனைவருக்கும் உரிமைகளை வழங்குகிறது. வகுப்புவாதப் பெரும்பான்மையோ இந்து மதத்தில் பிறந்திருப்போருக்கு மட்டுமே உரித்தானது; அவர்கள் மட்டுமே தீர்மானிக்கக் கூடியது.

அரசியல் பெரும்பான்மையை உறுதி செய்யும் ஒரு ஜனநாயக ஓட்டத்தில் மதப் பெரும்பான்மை அதற்கான அடையாளத்தோடு எப்படி பங்கெடுக்க முடியும்? மதப் பெரும்பான்மை என்ற அடையாளத்தை அங்கீகரித்து விட்டால் அது பரம்பரை ஆட்சிக்கு வழி திறந்து விடும். பிறகு மதப் பெரும்பான்மை கொடுங்கோல் ஆட்சியாகவே மாறிப் போய்விடும். ஜனநாயகத்தை சீர்குலைத்து விடும்”.

**- வட்டமேஜை மாநாட்டில் எழுத்துபூர்வமாக சமர்ப்பித்த உரையில்**
**- புரட்சியாளர் அம்பேத்கர்**

### கொரானா காலத்திலும் கொழுத்த அதானி-அம்பானிகள்

கடும் பொருளாதார நெருக்கடியில் இந்தியா சிக்கித் தவிக்கிறது. ஆனால், பெரும் கார்ப்பரேட் முதலாளிகள் சொத்து மதிப்பு மட்டும் பல மடங்கு உயர்ந்துள்ளது. மார்ச் 2017லிருந்து டிசம்பர் 2020 வரையிலான மூன்று ஆண்டுகளில் அதானியின் சொத்து மதிப்பு 6 மடங்கு உயர்ந்துள்ளது. 5.37 பில்லியன் ரூபாயிலிருந்து 34 பில்லியனாக உயர்ந்துள்ளது. கொரானா பாதிப்பு காலமான 2020 ஜூன் மாதத்திலிருந்து மட்டும் 3.5 மடங்கு உயர்ந்துள்ளது. அம்பானியின் சொத்து மதிப்பு மே 2017லிருந்து டிசம்பர் 2020 வரை 2.8 மடங்கு, அதாவது 26.6 பில்லியனிலிருந்து 74.4 பில்லியனாக உயர்ந்துள்ளது. ஜூன் 2020க்குப் பிறகு 1.3 மடங்கு அதிகரித்துள்ளது.

இந்தியாவில் 39 சதவீத சொத்துகள் ஒரு சதவீதத் தினரிடம் மட்டுமே குவிந்துள்ளன. இதே காலகட்டத்தில் சீனா, அமெரிக்கா நாடுகளில் பணக்காரர்களின் வளர்ச்சியைவிட இது பல மடங்கு அதிகம்.

50 மில்லியன் ரூபாய்க்கு மேல் 2019 இறுதியில் சொத்து சேர்த்த பணக்காரர்கள் 4593 பேர்; இந்தப் பட்டியலில் புதிதாக சேர்ந்தவர்கள் 58 பேர்.

- ஆதாரம்: ப்ளூம்பெர்க் பில்லியனர்ஸ் குறியீடு
தகவல்: ‘இந்து’ ஆங்கில நாளேடு, டிசம்.7, 2020

## அம்பேத்கர் சிலை அமைக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

கோவை மாநகராட்சி தீர்மான எண் 132 நாள் 24.9.2007இன்படி கோவை நீதிமன்றம் வளாகத்திற்கு எதிரே உள்ள தீவுத்திடலில் புரட்சியாளர் அம்பேத்கரின் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவக் கோரி கோவையில் அனைத்து முற்போக்கு இயக்கங்கள் சார்பில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன் தலைமையில், 06.12.2020 அன்று காலை 11 மணியளவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி உரையாற்றினார். மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன் தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் மற்றும் மாவட்ட, மாநகர பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



## கீதை ஒரு பிதற்றல்



தோழர் அம்பேத்கார் அவர்களின் தைரியத்துக்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். அவர் மந்திரியாக இருக்கும்போது ஒருதடவை சென்னைக்கு வந்திருந்தார். அப்போது ஒரு கூட்டத்தில் பேசும்போது,’கீதை - முட்டாள்களின் பிதற்றல்’ என்று சொன்னார். கீதைக்கு இந்த நாட்டில் எவ்வளவு விளம்பரம் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். காந்தியாரிலிருந்து, ஆச்சாரியாரிலிருந்து - பெரிய அய்க்கோர்ட் ஜட்ஜூகள், இன்னும் பெரிய மனிதர்கள் என்பவர்களெல்லாம் கீதையைப் புகழ்வதே வேலையாகக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; கீதைக்கு வியாக்கியானம் கூறுவது, கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது என்பது ஒரு மதிப்பு, கவுரவம் என்பதாக இந்த நாட்டில் இருக்கிறது. அப்படிப்பட்ட பெரும் விளம்பரமான நிலையிலிருக்கிற கீதையை, ‘முட்டாள்களின் பிதற்றல்’ என்று அம்பேத்கார் சொன்னார். முட்டாள்களுடையது என்றாலே மோசம்; அதிலும் அந்த முட்டாள்களுடைய பிதற்றல் என்று கீதையை மிகவும் இழிவுபடுத்திக் கூறினார். யார் யாரை இதுபோய்ப் பாதிக்கிறது பாருங்கள்! அவர் அந்தப்படி பேசியபின் பார்ப்பனப் பத்திரிக்கைகள் அவருடைய பேச்சுக்கு மறுப்பு ஒன்றும் சொல்லாமல், ‘ஒரு மந்திரியாய் இருப்பவர் இப்படியெல்லாம் பேசலாமா ?’ என்று எழுதின. அவ்வளவுதான் அவைகளால் முடியும் தவிர, அவர் சொல்லுவதை எப்படி எந்த ஆதாரத்தின் மீது மறுக்க முடியும்?

**பெரியார், ‘விடுதலை’ 16.05.1952**

## மாணவர் கழகக் கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் உரை (3)

# பெரியார் தத்துவம் பார்ப்பனிய பாசிசத்தை மறுத்து மானுட சுயமரியாதை பேசியது!

***தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் 27.09.2020 அன்று மாலை 6 மணியளவில், பெரியார் 142ஆவது பிறந்தநாள் விழா கருத்தரங்கம், "திராவிடம் தந்த கல்விக் கொடை, அதை சிதைக்க விடாது நம் பெரியார் படை" என்ற தலைப்பில் இணையவழியில் நடைபெற்றது. கருத்தரங்கத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரை. சென்ற இதழ் தொடர்ச்சி.***

பெரியாருடைய கடவுள் மறுப்பு என்பது, மனிதனுக்கு மனிதன் ஏன் இந்த வேற்றுமை என்ற கேள்விகளுடன்தான் புறப்பட்டது. அதற்கு சாஸ்திரம் காரணம் என்று கூறினார்கள். அப்படியானால் சாஸ்திரத்தை ஏற்றுக்கொள்ளமாட்டேன் தீ வைத்து எரிப்பேன் என்று பெரியார் கூறினார். சாஸ்திரம் மதத்தின் அடிப்படையில் உருவானது என்று பாசிசப் பார்ப்பனியம் கூறியது. அப்படியானால் அத்தகைய மதம் எங்களுக்குத் தேவையில்லை மதம் ஒழிக என்று கூறினார். மதத்தை நாங்கள் உருவாக்கவில்லை கடவுளாகப் பார்த்து உருவாக்கியதுதான் வேத மதம் இந்து மதம் அது தான் வர்ணாஸ்ரமத்தை கற்பித்தது என்று கூறினார்கள். அப்படியானால் அப்படிப்பட்ட கடவுள் எங்களுக்குத் தேவை யில்லை, 'கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை, கடவுளை கற்பித்தவன் முட்டாள், கடவுளை பரப்புகிறவன் அயோக்கியன், கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி' என்ற நிலைக்கு பெரியார் சென்றார். பெரியார் பேசிய கடவுள் மறுப்பு என்பது, பாசிச பார்ப்பனியத்தின் சமூக ஒடுக்குமுறையையும் சமூக ஆதிக்கம் என்ற ஆணிவேரையும் எதிர்த்து புறப்பட்ட ஒரு முழக்கம் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். பெரியார் பேசிய கடவுள் மறுப்பு, மத எதிர்ப்பை முன்வைத்து பெரியாரை இந்த மண்ணிலிருந்து அப்புறப்படுத்தி விடலாம் என்ற முயற்சியிலே
தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். அதற்காக பெரியார் சிலைகளை அவமதிப்பது போன்ற செயல்களை செய்து வருகிறார்கள்.

அப்படி கடவுள் மறுப்பு பேசிய மண்ணில் கோவில் சிலைகள் உடைக்கப்பட்டது இல்லை; கோவில் தகர்க்கப்பட்டதில்லை; கலவரங்களும் பெரியார் பேசிய கடவுள் மறுப்பால் நிகழ்ந்தது இல்லை; பார்ப்பன எதிர்ப்பு பேசிய இந்த தமிழ் மண்ணில் எந்த ஒரு இடத்திலும் பார்ப்பனர்கள் தாக்கப்பட்டார்கள் என்றோ வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்றோ சம்பவங்கள் நடந்தது கிடையாது. அறிவுசார்ந்த கருத்துப் போராட்டத்தைத் தான் பெரியார் நடத்தி இருந்தார். உதாரணத்திற்கு ஒன்றைக் கூற முடியும். காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது, காந்தியை சுட்டுக் கொன்றவன் கோட்சே என்ற ஒரு பார்ப்பனர். காந்தியை கோட்சே என்ற ஒரு பார்ப்பனர் சுட்டுக் கொன்றுவிட்டான் என்ற செய்தி அறிந்தவுடன் இந்தியாவில் பல இடங்களில் மிகப்பெரும் கலவரங்கள் வெடித்தன. குறிப்பாக மகாராஷ்டிரா மாநிலத்தில் அந்த மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் கட்சிக்காரர்களே சங் பரிவாரங்கள் நடத்திய கல்விக் கூடங்களை தீ வைத்துக் கொளுத்தினார்கள். பார்ப்பனர்களின் வீடுகளை குறி வைத்து தாக்கினார்கள், அக்ரஹாரங்கள் எரிக்கப்பட்டன, காங்கிரஸ் கட்சியில் பார்ப்பனர்கள் இனி எந்த பொறுப்பிலும் இருக்கக் கூடாது என்று அறிவித்தார்கள். வன்முறை தலைவிரித்தாடியது. அப்போது, ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தத்தை உருவாக்கிய கோல்வாக்கர் சென்னையில் தான் இருந்தார். அவர் உடனடியாக பம்பாய்க்கு புறப்பட்டுச் சென்றார். ஆர்.எஸ்.எஸ். தலைமையகமான நாக்பூரில் இருந்த அவரை உயிருடன் கொளுத்துவதற்கு பார்ப்பனரல்லாத காங்கிரஸ்காரர்களே திரண்டார்கள். அப்போது உள்துறை அமைச்சராக இருந்த டி.பி. மிஸ்ரா, கோல்வாக்கரை சிறையிலடைத்து பத்திரமாக பாதுகாத்தார். இவ்வளவு வன்முறைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஏற்கெனவே தமிழ்நாட்டில் பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் நடத்திக் கொண்டிருந்த பெரியார் ஒரு கண் அசைத்திருந்தால் ஒரு பார்ப்பனர் கூட தமிழ்நாட்டில் மிஞ்சியிருக்க முடியாது. ஆனால் அன்றைக்கு பெரியார், "தமிழர்களே அமைதியைக் காப்பாற்றுங்கள்; வன்முறையில் ஈடுபடாதீர்கள்" என்று இந்த தமிழ்நாட்டில் அமைதியை நிலைநாட்டச் செய்தார். 'அகில இந்திய வானொலி' பெரியாரை என்றைக்கும் பேச அழைத்தது இல்லை. அது பார்ப்பனர்கள் கையில் இருக்கிற ஒலிபரப்பு சாதனம். அந்த அகில இந்திய வானொலியே பெரியாரை அழைத்து, நீங்கள் மக்களை அமைதியாக இருக்கக் கேட்டுக் கொள்ளுங்கள் என்று பெரியாரையும், அண்ணாவையும் பேச அழைத்தது. பெரியார், வானொலியில் அமைதியை காப்பாற்றுங்கள் என்று கூறி தமிழ் நாட்டில் பார்ப்பனர்களின் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்தார் என்பதை ஒவ்வொரு பார்ப்பனரும் நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டும்.

> **பார்ப்பனர்களிடம் மாத்திரமல்ல.
> இந்த நிலையில் உள்ள எல்லோரிடத் திலுமே
> நான் வெறுப்புக் கொள்கிறேன்.**

இது தொடர்பாக தலைசிறந்த 'மண்வாசனை' எழுத்தாளர் கி.ராஜநாராயணன் கூறிய ஒரு சம்பவத்தைக் குறிப்பிட வேண்டும். பெரியாரிய உணர்வாளரான ஓவியர் புகழேந்தி, பெரியார் பற்றிய கோட்டு ஓவியங்களடங்கிய நூல் ஒன்றை 'திசைமுகம்' என்ற பெயரில் வெளியிட்டார். அந்நூலைப் பார்த்து பூரிப்புடன் ஓவியர் புகழேந்திக்கு 'கி.ரா.' எனும் கி.ராஜநாராயணன் ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

> *"திசைமுகம் கோட்டோவியங்களைப் பார்த்துக் கொண்டிருந்த போது இவை என்னை எங்கேயோ கொண்டு போனது. பெரியாரை முதன்முதலில் பார்த்தவுடன் ஒரு முனிவர் போல எனக்குக் காட்சி தந்தார் என்று என்னிடம் சொன்னவர் ஓர் அய்யர்வாள். எனக்காகச் சொன்ன வார்த்தை இல்லை அது; மனம் திறந்து சொன்னது.*
>
> *அப்படிச் சொல்ல அவருக்குக் காரணம் இருந்தது. காந்திஜி சுடப்பட்டவுடன், வானொலியில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. காந்திஜியை கொன்றவன் ஓர் இந்துதான் சுட்டுக் கொன்றான்.*
>
> *இப்படியே ஏன் சொல்லிக் கொண்டிருந்தார்கள்? முஸ்லீம் மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறையில்தான். அந்தச் சமயத்தில் ஒரு பொதுக்கூட்டம் திராவிடர் கழகத்தினர் நடத்தினார்கள். பெரும் மக்கள் கொண்ட கூட்டம் அது. உணர்ச்சி கொந்தளித்துக் கொண்டிருந்தது. பெரியார் பேசப் போகிறார். அதுக்கு முன்னால் ஒரு முக்கிய பிரமுகர் பேசினார்;*
>
> *காந்தியாரைக் கொன்றது யார் தெரியுமா? என்று கேட்டு கொஞ்சம் இடைவெளி விட்டுப் பேசத் தொடங்கியதும், மேஜை மேல் வைத்திருந்த தடிமனான தனது கைத்தடியினால் ஒரு வாத்தியார் பள்ளிப் பிள்ளைகளின் சப்தத்தை அமைதிப்படுத்த தட்டுவார்களே அதுபோல் தட்டி அந்தப் பேச்சாளரை எச்சரித்தார்.*
>
> *அந்தப் பேச்சாளர் சொல்லவந்தது; காந்தியாரைச் சுட்டுக் கொன்றவன் ஒரு பார்ப்பனன்; என்று பெரியாரின் அந்தக் கைத்தடி ஓசை 'அப்படிச் சொல்லிவிடாதே' என்று தடுத்து நிறுத்திவிட்டது. அந்தப் பிரம்பின் ஓசை எத்தனையோ மனித உயிர்களை காப்பாற்றியது, எத்தனையோ பெண்களின் கற்பைக் காப்பாற்றியது, கோட்சே ஒரு பிராமணன் என்று சொல்ல ரொம்ப நேரம் ஆகாது. அதன் விளைவை நொடியில் யூகித்த பெரியார் தடுத்து நிறுத்தினார்.*
>
> *பெரியார் என்ற மானுடன் அவரது உள்ளம் தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும்.*
>
> *ஓவியர் புகழேந்திக்கு 01.01.2004 இல் எழுதிய கடிதத்திலிருந்து... கி.ராஜநாராயணன்.*

என்று தனது நினைவுகளைப் பதிவு செய்துள்ளார். ('விடுதலை' வெளியிட்டுள்ள பெரியார் பிறந்த நாள் மலரிலும் இது பதிவாகியிருக்கிறது)

திரைமறைவில் பதுங்கி இருந்து கோடரிக் கம்புகளை ஏவி விட்டு, பெரியார் சிலைகளுக்கு காவிச் சாயம் பூசுவது, சிலையை சேதப் படுத்துவது என்று காலித்தனத்தில் இறங்கிக் கொண்டிருக்கிற பார்ப்பனர்கள், பெரியார் இந்த பார்ப்பனப் பிரச்சினையை எவ்வளவு பன்போடு அமைதியோடு கையாண்டார் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெரியார் வன்முறை வேண்டாம் என்று கூறியதற்கு காரணம், வன்முறை என்ற ஒன்று இந்த நாட்டில் வந்துவிட்டால்; அதில் பாதிக்கப்படக் கூடியவர்கள் ஒருபோதும் பார்ப்பனர்களாக இருக்க மாட்டார்கள்; நம்முடைய மக்கள்தான் பாதிக்கப் படுவார்கள் என்பதனால் தான் வன்முறை வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தாரே தவிர, காந்தியாரின் அகிம்சையை ஏற்றுக் கொண்டார் என்ற அடிப்படையில் பெரியார் அதைப் பார்க்கவில்லை. எனவே, இங்கு கோவில் சிலைகளுக்கு ஒரு சேதம் ஏற்படவில்லை, பார்ப்பனர்களுக்கு ஒரு தீங்கும் ஏற்படாதவாறு தான் தமிழ்நாட்டில் ஒரு சமூக மாற்றம் ஏற்பட்டது.

பெரியார் ஊர் ஊராக சென்று மக்களிடையே கருத்துக்களை பேசினார். பாசிசம் என்ன கூறுகிறது என்றால் நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும் கேட்காவிட்டால் இந்த நாட்டில் இருப்பதற்கான உரிமை உனக்கு கிடையாது. நீ கைது செய்யப் படுவாய், சிறையிலடைக்கப்படுவாய் அல்லது சுட்டுக்கொல்லப்படுவாய் இப்படித்தான் பாசிசம் கூறுகிறது. பார்ப்பனியம் என்ன கூறியதென்றால், 'நான் கூறுகிற வேதங்கள், வேத சடங்குகள் தான் உனக்கான வாழ்க்கை இந்த வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு நீ வாழ வேண்டும்; இந்த வாழ்க்கையை ஏற்காமல் நீ வாழ்ந்தாய் என்றால் நரகத்திற்கு போவாய், நீ சொல்லெனா கொடுமைக்கு உள்ளாவாய்' என்று கூறி ஒடுக்கப்பட்ட மக்களையே அச்சத்தின் காரணமாக, கடவுகளின் காரணமாக சடங்குகளை, சம்பிரதாயங்களை ஏற்க வைத்து தங்களை அடிமைப்படுத்தி அடிமையாக வைத்திருந்தது பார்ப்பனியம். இன்றைக்கும், பழக்க வழக்கங்கள், இதுதான் கலாச்சார மரபுகள், இப்படித்தான் இருக்க வேண்டும் கோவிலில் தமிழ்மொழி இருக்கக் கூடாது அர்ச்சகராக பிராமணர்கள் மட்டும்தான் இருக்க வேண்டும் இதுதான் பழக்க வழக்கம் என்று கூறி சட்டத்திலேயே அதற்கு ஏற்பு வழங்கி அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அனைவரையும் இந்துக்கள் என்று கூறுகிறார்கள். நாம் இந்துக்கள் என்ற அடையாளத்தை ஏற்கவில்லை. ஏற்காவிட்டாலும் நாம் அனைவரும் இந்துக்கள்தான் என்று கூறுகிற அளவிற்கு சட்டத்தை இந்த நாட்டில் திணித்து வன்முறை வழியாக அனைவரும் இந்துக்கள் என்ற சிறைக்குள்ளே அடைத்து வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட அடக்குமுறைகளை அன்றைக்கு செய்தவர்கள்; இன்று ஆட்சி அதிகாரங்கள் கைக்கு வந்தவுடன் அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்துகிறார்கள். ஆனால் பெரியார் அப்படி ஒருபோதும் செயல்பட்டதில்லை. அவர் ஒவ்வொரு கூட்டங்களிலும் இந்த ஆபத்துக்களை சுட்டிக்காட்டி பேசுகிறபோது, இறுதியில் 'நான் கூறுகிறேன் என்பதற்காக நீங்கள் என்னுடைய கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவசியமில்லை. உங்கள் மனதிற்கு நியாயம் என்று பட்டால், உங்கள் பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப் பாருங்கள் சரியென்றால் ஏற்றுக் கொள்ளுங்கள் இல்லாவிட்டால் அவற்றை தள்ளி விடுங்கள்' என்று மக்களிடம் கருத்து சுதந்திரத்தை விதைத்தார். அமைதியான வழியால் தான் பெரியார் பிரச்சாரத்தை செய்தார். தன் மீது வீசப்பட்ட கல்லடிகளையும், செருப்படிகளையும், சொல்லடிகளையும் சுமந்து கொண்டு இந்த சமூகத்திற்காக மீண்டும் மீண்டும் மக்களை சந்தித்து வன்முறையில் ஈடுபடாதீர்கள் என்று கூறி மக்களிடையே தொடர்ச்சியாக உரையாடினார். மக்களை ஆற்றுப்படுத்தி, மக்களை பக்குவப்படுத்தி உருவாக்கிய ஒரு சமூகமாக இங்கே இருக்கின்ற காரணத்தினால்தான் இன்று வரையிலும் ஆழமாக விதையூன்றப்பட்ட இந்த கொள்கைகளை ஏற்றுக்கொண்ட ஒரு மண்ணாக தமிழ்நாட்டு மண் மாறிப்போய் இருக்கிறது. வன்முறை மூலமாக இவைகளை இந்த மண்ணில் சாதித்துவிட முடியாது என்பதைப் புரிந்து வைத்திருக்கிற ஒரு தலைவராக பெரியார் இருந்தார்.

பாஜகவைச் சேர்ந்தவர்கள், வன்முறையாளர்களை, கொள்ளைக்காரர்களையெல்லாம் கட்சியில் சேர்த்து அவர்கள் வழியாக வன்முறைகளை ஏவி விட்டு இந்த மண்ணில் தாங்கள் பேசுகிற இந்துத்துவா கொள்கைகளை பரப்பிடத் துடிக்கிறார்கள் என்று பெரியார் கூறினார், 'நான் ஒரு சுதந்திர மனிதன். எனக்கு சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி உண்டு. அதை உங்கள் முன்பு சமர்ப்பிக்கிறேன். நீங்கள் என்னைப் போலவே உங்களது சுதந்திர நினைப்பு, அனுபவம், உணர்ச்சி ஆகியவைகளால் பரசீலனை செய்து ஒப்புக் கொள்ளக் கூடியவைகளை ஒப்பி தள்ளக் கூடியவைகளை தள்ளிவிடுங்கள் என்கிற நிபந்தனையின் பெயரிலே தான் எதையும் தெரிவிக்கிறேன். எப்படிப்பட்ட பழமை விரும்பிகளானாலும் இதற்கு இடம் கொடுக்கவில்லையானால் அதற்கு நியாயமும் ஒழுங்கும் ஆகாது' என்று ஒவ்வொரு கூட்டத்திலும் கூறினார். பாசிசம் இதற்கு நேர்மாறானது. நான் கூறுவதைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் ஏற்காவிட்டால் கடுமையான தண்டனை என்றுதான் பார்ப்பனியம், பாசிசம் கோலோச்சிக் கொண்டிருக்கிறது. ஹிடலர் யூதர்களை எதிர்த்தார் என்றால் அது யூத இன வெறுப்பு. பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு என்பது ஹிடலரின் யூத எதிர்ப்பை போன்றது இல்லை.

பெரியார் பார்ப்பனர்களை ஏன் எதிர்க்கிறேன்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# வேதம் குறித்து பொழிலன் எழுதிய ஆய்வு நூலுக்காக தமிழக அரசு வழக்கு: நடப்பது ஆரிய தர்ம ஆட்சியா?

வேதத்தை விமர்சிக்கவே கூடாது; வேதத்தை நிந்திப்பவன்தான் 'நாத்திகன்' என்றார், இறந்து போன சங்கராச்சாரி சந்திரசேகரேந்திரன்!

வேதத்தை 'சூத்திரன்' படிக்கக் கூடாது; வேதத்தைக் காதால் கேட்கக் கூடாது; படித்தவன் நாக்கை வெட்ட வேண்டும் என்கிறது 'மனுசாஸ்திரம்'.

முருகன் தமிழ்க் கடவுள் என்கிறார், பா.ஜ.க. முருகன்; கறுப்பர் கூட்டம் என்ற 'யுடியூப்' நடத்தும் இரண்டு இளைஞர்கள் தமிழ்க் கடவுளை அவமதித்துவிட்டார்கள் என்று கூறி ஊர் ஊராக 'வேல் யாத்திரை' போனார். என்னப்பா, அவமதிப்பு என்று கேட்டால் 'கந்தசஷ்டி கவசம்' வரிகளைப் படித்தார்கள் என்கிறார்! கந்தனைப் போற்றிப் பாடிய பக்திப் பாசுரம் தானே கந்தசஷ்டி கவசம். அது ஆபாசமாக இருக்கிறது என்றால் அது பாடல் மீது குற்றமா? அதை எடுத்துச் சொன்னவர்கள் மீது குற்றமா? இந்தக் கேள்விக்கு எடுத்துச் சொன்னவர்கள் தான் 'குற்றவாளிகள்' பாடல் மீது குற்றமல்ல என்று தமிழக அரசு கூறி இரண்டு இளைஞர்களையும் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்து விட்டது.

தொடர்ந்து சில தமிழ் தொலைக் காட்சிகள் கந்தசஷ்டி கவசத்தையும் அதில் அடங்கியுள்ள ஆபாச வரி களையும் ஒவ்வொரு நாளும் சூலமங்கலம் சகோதரிகளின் பாடல் வழியாக ஒளிபரப்பி 'பக்தி'யைப் பரப்பி வருகின்றன.

முருகன் தமிழ்க் கடவுள் என்றெல்லாம் கூறக் கூடாது என்கிறார் காஞ்சி சீனியர் சங்கராச்சாரி சந்திரசேகரேந்திரன். அவர் கூறுகிறார்:

"'முருகனைத் தமிழ்த் தெய்வம்' என்று குறிப்பாகச் சொல்லிக் கொள் கிறோம். ஆனால் இந்தக் காலத்தில் தமிழ் மதம் வேறு; வேத நெறி வேறு என்று பேதம் செய்வதில் சிலருக்கு ருசி இருந்து வருகிறது. இது ஆராய்ச்சி என்று சொல்லிக் கொண்டு நம் ஜனங்களைப் பேதப்படுத்துவதற்காக வெள்ளைக்காரர்கள் செய்த விஷமத் தின் அனர்த்தமான விளைவு; வேத மதம் தான் தமிழ் மதமாக இருந்திருக் கிறது என்பதுதான் என் அபிப் ராயம்." - தெய்வத்தின் குரல் நூல் (பக்.606)

'தமிழ்க் கடவுள்' என்ற போர்வைக் குள் பதுங்கி நிற்கும் பூனைக் குட்டிகளை காஞ்சி சங்கராச்சாரி வெளியே தூக்கி வந்து போட்டு விட்டார்.

பா.ஜ.க. முருகன் 'தமிழ்க் கடவுளை'க் காப்பாற்றும் 'வீரத் தமிழன்' வேடம் போட்டுள்ளார் என்றால் தமிழக அரசு 'வேதத்தையேக் காப்பாற்றும் 'புரோகிதர்' வேடத்தைப் போடுவோம் என்று புறப்பட்டிருக் கிறது.

பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப் பாளரும் பாவலரேறு பெருஞ் சித்திரனார் மகனும், தமிழின விடுதலைப் போராளியுமான தோழர் பொழிலன், 'வேதவெறி இந்தியா' என்ற ஆய்வு நூலை 2018இல் எழுதி வெளியிட்டார். வேதம் குறித்து 20 தலைப்புகளில் விரிவாக விவாதிக்கும் ஆய்வு நூல். இந்த நூலை எழுதி வெளியிட்டது குற்றம் என்று தமிழக அரசின் காவல்துறை கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ் பொழிலன் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறது. இந்தியக் குற்றவியல் சட்டப் பிரிவு 153, 153A(a)b), 565(a)(b)(c) ஆகிய பிரிவு களின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளது.

வேதம் பற்றி ஆய்வு செய்தால் பொது மக்கள் பீதி அடைவார்கள்; பொது அமைதி குலைந்து விடும்; வெவ்வேறு பிரிவுகளுக்கிடையே பகைமை வளரும்; மக்களைத் தூண்டி விடும்; அதனால் கலகம் வந்து விடும் என்று இந்தக் குற்றச்சாட்டுகள் கூறுகின்றன. இதன்படி நியாயமாக வேதங்களைத்தான் தடை செய்ய வேண்டும்.

நூல் வெளியாகி இரண்டு ஆண்டுகளில் அந்தக் கலகம், பீதி, வெறுப்பு எதுவும் உருவாகியதாக தெரியவில்லை. தமிழக அரசு தான் 'வேத புரோகிதமும் பார்ப்பனர்களும்' கலக்கமடைந்துவிடக் கூடாது என்று கவலைப்படுகிறது. அடுத்து 'அண்ணா'வின் 'ஆரிய மாயை', 'வர்ணாஸ்ரமம்', 'இந்து கண்ட சாம்ராஜ்யம்', 'விதைக்காது விளையும் கழனிகள்', 'நிலையும் நினைப்பும்' போன்ற நூல்களைத் தடை செய்தாலும் வியப்பதற்கு இல்லை.

வேதங்களைத் தடை செய்யாமல் வேதங்களைப் பற்றிய ஆய்வு நூலுக்கு மட்டும் தடை போடுகிறார்கள் அல்லவா? அதற்குப் பெயர்தான் 'மனுசாஸ்திர' ஆட்சி.

கருத்துரிமையைப் பறிக்கும் இந்த அடாவடித்தனத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வலியுறுத்து கிறோம்!

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறியிருக்கிறார். இது முக்கியமான கருத்து, பார்ப்பன எதிர்ப்பு என்பதில் எவ்வளவு ஜனநாயகம் மற்றும் மனிதாபிமானம் உள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

"பார்ப்பனத் தோழர்களே! நான் மனிதத் தன்மையில் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்லேன். தமிழ்நாட் டிலேயே அநேக பார்ப்பனப் பிரமுகர்கள் - பெரியோர்கள் ஆகியோர்களுக்கு அன்பனாகவும், மதிப்புக்குரியவனாகவும் நண்பனாகவும் கூட இருந்து வருகிறேன். சிலர் என்னிடத்தில் அதிக நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள். சமுதாய துறையில் பார்ப்பனர்கள் அனுஷ்டிக்கிற உயர்வு, அவர்கள் அனுபவிக்கிற அளவுக்கு மேற்பட்ட விகிதம் - ஆகியவைகளில்தான் எனக்கு வெறுப்பு இருக்கிறது. இது பார்ப்பனர்களிடம் மாத்திரமல்ல. இந்த நிலையில் உள்ள எல்லோரிடத் திலுமே நான் வெறுப்புக் கொள்கிறேன்.

இந்நிலை என்னிடத்தில் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், ஒரு தாய் வயிற்றில் பிறந்த எல்லா மக்களுக்கும் சம அனுபவம் இருக்க வேண்டும் என்று கருதி, ஒன்றுக் கொன்று குறைவு, அதிகம் இல்லாமல் பார்த்துக்கொள்வது எப்படி ஒரு தாய்க்கு இயற்கை குணமாக இருக்குமோ, அதுபோலத்தான் எனக்கும் தோன்றுகிறது.

மற்றும் அந்தத் தாய் தனது மக்களில் உடல் நிலையில் இளைத்துப் போய், வலிவுக் குறைவாய் இருக்கிற மகனுக்கு, மற்ற குழந்தைகளுக்கு அளிக்கிற போஷனையைவிட எப்படி அதிகமான போஷனையைக் கொடுத்து மற்ற குழந்தைகளோடு சரிசமானமுள்ள குழந்தையாக ஆக்க வேண்டு மென்று பாடுபடுவாளோ, அது போலத்தான் நான் மற்ற வலுக்குறைவான பின் தங்கிய மக்களிடம் அனுதாபம் காட்டுகிறேன். இந்த அளவுதான் நான் பார்ப்பனரிடமும், மற்ற வகுப்புகளிடமும் காட்டிக் கொள்ளும் உணர்ச்சி ஆகும்" என்று 19.05.1948இல் பெரியார் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த அடிப்படையில்தான் இவைகளை எதிர்த்து திராவிடம் களத்திலே நின்று கொண்டிருக்கிறது. திராவிடத்தை எதிர்த்து பாசிசம் தனது அதிகாரங்களை வைத்து படையெடுத்து வருகிறது. அவைகளினுடைய படைக்கருவிகள் தான் இந்த தேசிய கல்விக் கொள்கை, நீட் தேர்வு, வேளாண் சட்டங்கள், சுற்றுச்சூழல் சீர்கேடு சட்டங்கள், ஜி.எஸ்.டி., மாநில அடையாளங்களை ஒழிக்கின்ற சட்டங்கள் கொண்டு வருகிறார்கள். 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த வரலாற்றை ஆராயப் போகிறோம் என்று கூறுகிறார்கள். 12 ஆயிரம் ஆண்டு என்று ஏன் வரையரை வைத்திருக்கிறார்கள்? 12 ஆயிரம் ஆண்டு என்பதன் பின்னணி, ஆரியப் பண்பாட்டை நிலை நிறுத்துவதற்குத் தான். அவர்களுக்கு அதற்காக இன்று ஒரு ஆவணம் தேவைப்படுகிறது அதனால்தான். ஆரியப் பண்பாடு, சமஸ்கிருதப் பண்பாடும் தான் இந்தியப் பண்பாடு என்பதை அறிவிக்கிற சூழ்நிலைக்கு அவர்கள் வந்துவிட் டார்கள். அதற்கு எதிரான களத்திலே பெரியாரியம், திராவிடம் தான் களத்திலே நின்று கொண்டிருக்கிறது அந்த களத்திலே நாம் தான் வெற்றி பெறுவோம்.

(நிறைவு)

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)



10 மணியளவில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு அன்பு ரவி தலைமை தாங்கினார், மாவட்ட செயலாளர் க. ராமர் முழக்கம் எழுப்பினார், நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் சி. சாமிதுரை, மாவட்ட துணை செயலாளர் முநாகராஜ், நகர ஒன்றிய அறிவியல் மன்ற அமைப்பாளர் வீ. முருகன், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் பாரதி, ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர் இரா. கார்மேகம், கி. ஆனந்தன், மா. தலித்குமார், பாலமுருகன், பெரியார் வெங்கட், சுபாஷ், வல்லரசு, கௌதம், மதிராஜ் உள்ளிட்ட 26 தோழர்கள் கலந்து கொண்டனர்.



**நாமக்கல் :** நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் பேருந்து நிலையம் அருகில் காலை 10 மணியளவில் அம்பேத்கர் உருவ படத்திற்கு மாவட்ட அமைப்பாளர் அ.முத்துப் பாண்டி தலைமையில் மாலை அணிவிக்கப் பட்டது. மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட துணை செயலாளர் பிரகாஷ் உட்பட நகர கழக பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். மேலும், இராசிபுரம், திருச்செங்கோடு, குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் நகர கழகத் தோழர்கள் சார்பில் அம்பேத்கர் சிலை மற்றும் உருவப்படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது.



**சேலம் :** சேலம் கிழக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில், சேலம் மாநகரத்தில் அமைந் துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு காலை 10 மணியளவில் மாலை நங்கவள்ளி விஜயலட்சுமி மாலை அணிவித்தார். சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், நங்கவள்ளி அன்பு, தேவராஜ், மணியனூர் சரவணன், செல்வ மணி, இளம்பிள்ளை கிருஷ்ணன், சௌந்தர் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் :** மேட்டூர் அச்சங்காடு பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு காலை 10 மணியளவில் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டு கொள்கை முழக்கங்கள் எழுப்பப் பட்டன.



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 11th December 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN